REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 11உ புதன் (27—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 12உ வியாழன் (28—10—54) [இதழ் 116

## திராவிடத்தின் தீப்பெட்டித் தொழிலை நசுக்க மத்திய அரசாங்கத்தின் மறைமுக ஏற்பாடு!

தீப்பெட்டித் தொழிற்சாலை அமைப்பது போன்ற குடிசைத் தொழில் வளர்ச்சிக்காக, ஒரிசா மாநிலத்திற்கு ரூ. 5 இலட்சமும், சவுராஷ்டிர மாநிலத்திற்கு ரூ. 3 இலட்சமும் கடனாகவும், அகில இந்திய கதர், கிராமத்தொழில் குழுவுக்கு, மானியமாக ரூ. 2,65,000-மும், கடனாக ரூ. 1,89,700-மும் தர மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை அமைக்க மூலதனத்திற்காகவும், சுமார் 100 கூட்டுறவு சங்கங்களை அமைக்கவும், மூன்று மத்திய கிடங்குகளை நிறுவும் பொருட்டும், அளிக்கப்பட்டுள்ள மானியமும், கடன் தொகையும் பயன்படுத்தப்படும் என்றும் தெரிகிறது.

# 'தமிழ்நாட்டு கலைஞர்களுக்கு அவமானம்'

## 'கலை விழாவில் கலந்து கொள்ள முடியாது'

### டில்லி சங்கீத நாடக மன்றத்தின் போக்கு கண்டு நாடகக் கழகம் சீற்றம்

சென்னை, அக். 26—

"தமிழ் நாடகத் துறையில் நீண்ட காலமாக ஈடுபட்டு பெரும் புகழும் பெற்றிருக்கும் நடிகர்களின் பெயர், சென்னை மாநில நாடக விழாக் குழுவில் இடம் பெருமல் இருப்பது துரதிர்ஷ்டமாகும்.

"வட்டார விழாவைக் கொண்டாடும் உரிமையையும், தேசிய விழாவில் நடிப்பதற்கான தமிழ் நாடகங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பையும், சங்கீத நாடக மன்றத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதும், அத்துறையில் அது மட்டுமே முழு பிரதிநிதித்துவம் உடையதுமான நாடகக் கழகத்திடம் ஒப்படைத்திருக்க வேண்டும்.

"புதியதோர் அமைப்பினிடம் மேற்குறிப்பிட்ட பொறுப்புகளை ஒப்படைத்துள்ளதானது, தமிழ் நாட்டுக் கலைஞர்களையே அவமானப் படுத்துவதாக உள்ளது என நாடகக் கழகம் கருதுகிறது; எனவே, நாடகக் கழகத்தில் தொடர்புடைய நடிகர் அனைவரும் மேற்படி விழாவில் கலந்துகொள்ளமாட்டார்கள்."

—இவ்வாறு, சென்னை நாடகக் கழகத்தின் நிர்வாகக் குழு, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், நடிகத் தோழர்கள் டி. கே. ஷண்முகம், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. எஸ். இராஜமாணிக்கம், கே. சாரங்கபாணி, டி. கே. பகவதி, பி. ஆர். பந்துலு, கே. சுப்பிரமணியம், சி. வி. வி. பந்துலு, எஸ். வி. சகஸ்ரநாமம், எஸ். டி. சுப்புலட்சுமி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

சங்கீத நாடக மன்றத்தின் சார்பில், டில்லியில் ஒரு கலை விழா நடைபெற இருக்கிறது. அதே போன்று சென்னையிலும் ஒரு கலை விழா, மேற்படி சங்கத்தின் ஆதரவில் நடைபெற இருக்கிறது. சென்னை கலை விழாவை நடத்தும் உரிமையையும், டெல்லி விழாவிற்கு தமிழ் நாடகங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பையும், பல கலை விழாக்களை நடத்தி அனுபவம் பெற்றுள்ள சென்னை நாடகக் கழகத்தினிடம் ஒப்படைக்காது, அப்பொறுப்பு, புதிதான ஒரு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநில சங்கீத நாடக மன்றம் கையாண்டுள்ள போக்கு, தமிழ் நாட்டு நடிகர்களை அவமானப்படுத்துவதாக இருக்கிறது என, நாடகக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கருதுகிறார்கள். மேற்படி விழாவில் பங்கு கொள்வதில்லை எனவும் முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

## 100 பேர் மாண்டனர்- 90 பேர் புதைந்தனர்

### புயல் விளைவித்த விபரீதம்

தெற்கு இத்தாலியில் ஏற்பட்ட பலத்த மழையின் விளைவாக பல உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் உண்டாகியிருப்பதாகத் தெரிகிறது.

சுமார் 100 பேர் மாண்டு போனார்கள் என்றும், 100 பேர் காயமுற்றனர் என்றும், சுமார் 100 பேர்கள் காணப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும் வீடுகள் இடிந்து விழுந்ததின்பேரில் சுமார் 90 பேர் மண்ணில் புதையுண்டனராம். வீட்ரி—ஸாலர்னோவுக் கிடையேயுள்ள ரயில் பாதைகள் கடலுக்குள் பெயர்த்தெறியப்பட்டதாம்.

மக்களுக்கு உதவி புரிய, துருப்புகளைத் தயாராக இருக்கும்படி, இத்தாலியப் பிரதமர் உத்திரவிட்டுள்ளார்.

## ரயில்கள் மோதின!

நியூயார்க் அருகே ஒரு பிரயாணிகள் ரயில் வண்டியும், கூட்ஸ் ரயில் வண்டி ஒன்றும் மோதிக்கொண்டதன் விளைவாக, ரயில்வே ஊழியர் ஒருவர் மாண்டார். மேலும் ரயில்வே ஊழியர்களில் 5 பேர் உட்பட 19 பேர் காயமடைந்தனர்.

## ஆவலும் உறுதியும்!

வியட்நாம் ஜனாதிபதி ஹோ-சி-மின், பிரதமர் நேருவிடம், இந்தோ - சீனப் பிரச்சினையை பிரான்சுடன் சமாதான முறையில் தீர்த்து, ஜினிவா ஒப்பந்தப்படி நடந்து கொள்வதாக உறுதியளித்துள்ளார் என்று தெரிகிறது. லாவோஸ், கம்போடியா நாடுகளின் சுதந்திரத்தைத் தாம் வரவேற்று, அவற்றுடன் நேச உறவு கொள்ள விரும்புவதாகவும் கூறியிருக்கிறாராம்.

## மூட்டை கட்டினர்!

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் முன்னாள் அதிகாரிகளாயிருந்த பிரெஞ்சுக்காரர்களில் 12 பேர் பிரெஞ்சுக்குக் கிளம்பிவிட்டார்கள். இன்னும் சில நாட்களில், மேலும் உள்ள 50 அதிகாரிகளும் கிளம்பிவிடலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது 'பயண'மான 12 பேர்களில், பிரெஞ்சிந்திய நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த ஒருவரும் ஆவார்.

## 'தென்னிந்தியாவில் கட்டாய இந்தித் திணிப்புக் கூடாது'

### தென்னாட்டவர் அச்சத்தைப் போக்க நிபுணரின் குறுக்கு வழி!

பம்பாய், அக். 27—

"தென்னிந்தியாவில் இந்தி மூலம் கல்வி போதிக்க வேண்டுமென இந்தி ஆதரவாளர்கள் வற்புறுத்துகின்றனர். இது, இந்தி மொழியின் முன்னேற்றத்திற்குத் தீங்கிழைப்பதாகும். இந்தி மூலம் கல்வி போதிக்கப்படுவதால் தங்கள் பகுதி மொழிகளுக்கும், பண்பாட்டிற்கும் ஊறு ஏற்படுமெனத் தென்னிந்திய மக்கள் பயப்படுகின்றனர். எனவே, இந்தியை பரப்புவதில் அவசரம் காட்டக்கூடாது,"

—என, பிரபல கல்வி நிபுணர், டாக்டர் அமர்நாத்ஜா, பம்பாய் மாகாண இந்தி சாகித்திய. சம்மேளனம் தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அதிகாரிகளாக பணிபுரிந்த ஆசிரியர்கள்

### 2 வருடமாகியும் பிரயாணப் படி தரப்படவில்லை

எட்டயபுரம், அக். 26—

அருப்புக்கோட்டை தொகுதிக்கு கடந்த 1952-ல் நடைபெற்ற பாராளுமன்ற உபதேர்தல் அதிகாரிகளாகவும், குமாஸ்தாக்களாகவும் பணிபுரிந்த எட்டயபுரத்தைச் சேர்ந்த 29 பள்ளி ஆசிரியர்களுக்கு இன்றுவரை பிரயாணப் படி தரப்படவில்லை என்ற தகவல் வெளிவந்துள்ளது.

அத்தொகுதியில் திரு. முத்துராமலிங்கத் தேவர் ராஜினாமாச் செய்ததால், கடந்த 23—6—52ல், உபதேர்தல் நடைபெற்றது.

காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட எம். டி. ராமசாமி வெற்றி பெற்றார்.

தேர்தல் வேலைகளைச் செய்து முடித்த பிறகு அதிகாரிகளுக்கான பிரயாணப் படிகளைத் தருமாறு அரசாங்கம் உத்திரவிட்டிருந்தது.

29 ஆசிரியர்களும் தேர்தல் வேலைகள் முடிந்ததும், 'படி'க்கான பட்டியல் தயார் செய்து அனுப்பி வைத்தனர். அனுப்பி 27 மாதங்களாகியும் இன்னும் அவர்களுக்குப் 'படி' கிடைத்தபாடில்லை.

29 பேர்களுக்கும் கொடுக்க வேண்டியது ரூ. 224—6—0 என்று தெரியவருகிறது.

கடந்த மாதம் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலில் பணிபுரிந்தவர்களுக்கெல்லாம்கூட, பிரயாணப் படி கிடைத்துவிட்டதாம்—சில நாட்களுக்குள்ளாகவே! 27 மாதங்களாகியும் பழைய தேர்தலில் ஊழியம் புரிந்த 29 பேருக்குப் பணம் வராதது குறித்து, ஆசிரியர் சார்பில் வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர், பிரயாணச் செலவுக்குக் கடன் வாங்கிக் கொண்டுதான் தேர்தல் வேலைகள் செய்திருக்கின்றனர் எனவும் தெரிகிறது.

## தூக்குத் தண்டனை தொடர்கிறது!

ஈரான் இராணுவ நீதி மன்றம் ஒன்று, மேலும் நான்கு அதிகாரிகளுக்கு தூக்கு தண்டனை தந்துள்ளது. அவர்கள் மீதும் வேவு பார்த்தல் போன்ற குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டனவாம்.

வேறு எழு அதிகாரிகளுக்கு அதே குற்றச்சாட்டுக்களின் மீது ஆயுள் தண்டனை தந்து, அந்த இராணுவ மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

யு. எஸ். விமானப்படையைச் சேர்ந்த விமானமொன்று, ரோம் நகரிலிருந்து வியான்ஸ் செல்லும் வழியில் ஆல்ப்ஸ் மலைகளின் அடிவாரத்தில் நொறுங்கி விழுந்ததாகவும், விமானத்திலிருந்த 21 பேர்களும் மாண்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும் தெரிகிறது.

## 'முதியோர் கல்விக்கு இருக்க வேண்டிய ஆதரவு இல்லை'

### 'நூற்றுக்குப் பதின்மர்தான் பள்ளிகளுக்கு வருகின்றனர்!'

முதியோர் கல்வி வெற்றி பெற கல்வித் துறை அலுவலர் கருத்துரை

"ஆறு ஆண்டுகளுக்கு முன்னதாகத் துவக்கப்பட்ட 'முதியோர் கல்வித் திட்டத்'திற்குக் கிடைத்துள்ள ஆதரவு, எந்த அளவில் கிடைக்கவேண்டுமோ, அந்த அளவில் கிடைக்கவில்லை. இம்மாநிலத்தில் மொத்தம் 20,000 முதியோர் கல்வித் திட்டப் பள்ளிகள் உள்ளன. சராசரியாக அப்பள்ளிகளுக்கு வருகிறவர்களின் முதியோர் தொகை, நூற்றுக்குப் பத்து விகிதத்திற்குமேல் இல்லை. மேலும் முதியோர்களை எப்படி பள்ளிகளுக்குக் கொண்டு வருவது என்பதே பிரச்சினையாகும்."

—இவ்வாறு, சென்னை அரசியலார் கல்வித் துறை முதன்மை அலுவலராக உள்ள தோழர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாணவர் சமூகப் பணி கழகத்தின் ஆதரவில், அரசியலார் கலைக் கல்லூரியில் நடைபெற்ற சமூகப் பணி அத்தாட்சி வழங்கும் விழாவில் கலந்துகொண்ட கல்வித் துறை முதன்மை அலுவலரை, தியாகராயர் கல்லூரி பொறுப்பாளர் எம். கே. சண்முகம் வரவேற்று உபசரித்தார். அலுவலர் மேலும்,

"முதியோர் கல்வியில் ஆர்வமுடைய மாணவர்கள், தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்புடன், முதியவர்களை அணுகக்கூடாது. மேற்படி திட்டத்தால் மேலும் பல முதியவர்கள் நலம் பெற வேண்டுமென மாணவர்கள் விரும்பினால், அவர்களுடன் அமர்ந்து, ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் செலவழித்து, அவர்களுடைய தேவைகளையும், எதை அறிய விரும்புகிறார்கள் என்பதையும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 27—10—1954 புதன்

# பல்வந்த்ராய் மனுமுறை!

ஒரு குலத்துக்கொரு நீதி கூறுவதில் மனு முதன்மையானவன் என்று, மனுநீதி கூறுகிறது.

'திருக்குறளை மறுவற நன்குணர்ந்தவர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி?' என்றார் மனோன்மணீயம் சுந்தரனார்!

ஜாதி எனும் சொல்லேயோ, அதன் கெடுபொருள் விளக்கும் வேறு ஒரு சொல்லேயோ, தமிழ் மொழி உடைத்தாயிருக்கவில்லை. பிறப்பினால் மக்களை உயர்த்தியும், தாழ்த்தியும் வைக்கும் இழிமுறையைத் தமிழர்கள் ஒப்புக் கொள்ளவில்லை; எனவே, அம்முறையைக் குறிக்க ஒரு சொல்லும் தமிழ் மொழியில் இல்லை. தமிழ் இனத்திற்கு, மனுநீதி, மாற்றான் நிலையில் உள்ளதாகும்.

—அக்கால சட்டத்தில், உருப்பெற்ற சமுதாயம் சிதறிவிடாமல் ஒழுங்கு பெற நடக்க, மனுமுறை மிகமிகத் தேவைப்பட்டது என வாதிடுகின்றனர், சில வக்கிர புத்தியினர்! இன்றும் அத்திருக் கூட்டம் சலசலப்புக் காட்டிக்கொண்டு தான் இருக்கிறது.

மனுமுறை தோன்றிய காலமும், அதற்குத் தேவை இருந்ததாகச் சொல்லப்படும் சமுதாய ஏற்பாடும், சீர்குலைந்து போய் பல நூற்றாண்டுகள் ஆகின்றன. இருந்தாலும், மனு விதைத்த கடுவிஷத்தின் விளைவு, இன்றும் பெரும்பான்மையான மக்கள் கருத்தை விட்டு அகலவில்லை. அதனால் உண்டான, மக்களுக்குள் எண்ணத் தொலையாத பிரிவுகளும், அந்தப் பிரிவுகளுக்குள் மாற்ற முடியாத உட்பகையும், இன்றும் நிலைத்து இருக்கின்றன.

ஒருவன், மற்றொருவனுக்குச் செய்த கொடுமையைப் பற்றிய துறையில் மட்டுந்தான், மனுநீதியை ஆங்கில துறைத்தனம் அலட்சியம் செய்தது. அதற்குப் பதில், ஜாதி பாகுபாடு கருதாத ஒரு 'கிரிமினல்' சட்டத்தை உருவாக்கி, செயலாற்றத் தொடங்கியது! ஆனால் உடைமைக்கு உரிமை பாராட்டும் துறையில், மனு இன்னமும் இளமை முறுக்கோடு தான், 'இந்து லா'வில் கோரத் தாண்டவம் ஆடிக் கொண்டு இருக்கிறான். ஆங்கில அரசு, அதற்கு, ஏற்கனவே, தாளம் போட்டுவிட்டது!

'இந்து லா'விலிருந்து மனுவும், அவன் வழிவந்த ஆரிய நீதியாளரும் கலந்துள்ள நஞ்சை நீக்கி, இந்திய அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதான ஒரு 'இந்து லா'வை உருவாக்க இந்தியப் பேரரசு முயன்று வருகிறது. அது பிடிக்காது, இந்திய அரசியல் சட்டத்திற்கு உயிர் ஊட்டிய காங்கிரஸ் மனு பரம்பரையினரே, புதிய 'இந்து லா'விற்கு முட்டுக்கட்டை போடுகின்றனர்! அதே நோக்கும் போக்குமுடைய வழக்கறிஞர்கள் சிலர் சட்ட நுணுக்கம் பேசி, பழைய 'இந்து லா'விற்குப் பக்கபலம் தேடுகின்றனர்! இது கண்டு, இந்தியப் பேரரசைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு இருக்கிற நேரு பண்டிதரோ, புதிய 'இந்து லா'வை எதிர்த்தால் 'துறவு பூணுவேன்' என அச்சுறுத்திப் புதிய 'லா'விற்குப் புத்துயிர் தரமுயற்சிக்கிறார்!

என்றோ ஒரு காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் ஆரிய நீதிமான்களான மனுவும் மாந்தாதாவும், பராசரரும் யாக்ஞவல்கியரும், பாலுக்கு ஒரு நீதியும், ஆளுக்கு ஒரு முறையுமாகத் தீட்டியுள்ள அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, சக்கையை தூர எறிந்து, சாரத்தை மட்டும் வடிகட்டி எடுத்து, 'இந்து லா' என பெயரிட்டான், இந்தியத் துணைக் கண்டத்தை இயன்ற மட்டும் சுரண்ட வந்த ஆங்கிலேயன்! அந்த 'இந்து லா' அரசியல் சட்டத்திற்கு முரணாக உள்ளது—அதற்கொப்பப் புதுப்பிக்க வேண்டும்—எனக் கிளம்பியுள்ள நேருவை ஒத்த காங்கிரஸ் குழுவினர், நடைமுறை அரசியல் துறையில், மனுவையும் தோற்கடித்து விடும் நிலையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்பது, வேதனை தரும் விசித்திரமாக உள்ளது.

ஒரு துறையில் மனு முறை கூடாது என்போர், வேறு ஒரு முக்கியமான துறையில் மனு முறை ஆகும்—நியாயமானது எனக் கூறிடக் கிளம்பினால், எவர் மனம்தான், அது கண்டு புண்படாது இருக்கும்? அவர்கள் போக்கு கண்டு, எவர் தான், அவர்களுடைய நல்லெண்ணத்தில் சந்தேகம் கொள்ளாமல் இருப்பர்?

இந்தியத் துணைக் கண்டத்தில், அரசியல் துறையில், முதல் முதலாகத் தோன்றியது காங்கிரஸ் கட்சிதான் என்பது வரலாறு. அதன் பின்னர்தான், மாநில நிலையிலும் சரி, அகில இந்திய நிலையிலும் சரி, அரசியல் கட்சிகள் சில எழுந்தன என்பதும் வரலாறு. இந்த முன் தோன்றுதல் பின் தோன்றுதல் என்பதில் பெருமையும் இல்லை சிறுமையும் இல்லை—தேவை, சூழ்நிலை ஆகிய இரண்டினாலும் உந்தப்பட்டுத்தான், ஒரு புது இயக்கம் தோன்றுகிறது என்ற பொது நியதியைத் தெரிந்திலாதவர்கள் தான், மேற்குறிப்பிட்டுள்ள முதல், இரண்டாவது என்ற பிரச்சினையில் உயர்வு தாழ்வு இருப்பதாகக் கொண்டு மனக் குழப்பம் கொள்ளுவர். பொது விதி உணர்ந்த மற்றோர், தலைவீக்கமும் கொள்ளார்—தாழ்வுள்ளமும் பெறார்!

இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் துறையில், தாய் என்ற இடத்தில் உள்ள காங்கிரஸ், அப்பழுக்கற்ற நடைமுறையினால், மற்ற அரசியல் கட்சிகளும் பின்பற்றும்வகையில், சிறந்த அரசியல் மரபுகளை உண்டாக்கிக் கட்டிக்காக்க வேண்டும்.

அதாவது, காங்கிரஸ் கட்சியின் செயல், தூய்மையானதாகவும், அறநெறி பிறழாததாகவும், எல்லா கட்சியினருக்கும் வழிகாட்டக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். அதுதான் முதல் முதல் தோன்றியதாகக் கூறிக்கொள்ளும் சிறப்புடைய காங்கிரஸ் கட்சியின் நீங்காக் கடமையாகும்.

காங்கிரஸ் அறவழியிலிருந்து நீங்கிச் சென்றால், அதனால் மக்களிடம் ஏற்படும் அவநம்பிக்கை, காங்கிரஸ் கட்சியைச் சிதைப்பதோடு மட்டும் நின்றுவிடாது. அது காங்கிரசையும் கொன்று, பொதுவாக மற்ற அரசியல் கட்சிகளின் வளர்ச்சியையும், குறிப்பாக அரசியல் துறையையுமே, அவநம்பிக்கை கொண்டு பார்க்கும் அளவிற்கு மக்களைக் கொண்டுபோய் நிறுத்திவிடும். மீண்டும் அரசியல் துறையைப் புனிதமாக்குவது என்பதும், அதன்மீது நம்பிக்கை வைக்குமாறு மக்களை ஊக்குவிப்பது என்பதும் பல ஆண்டு காலம் காத்துக் கிடக்க வேண்டிய பயங்கர விஷயமாகிவிடும். அதனால்தான், முதல் முதலாக முன்தோன்றிய அரசியல் கட்சி எனப் பீத்திக் கொள்ளும் காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, அதன் நடைமுறை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டது.

காங்கிரசின் பொதுச் செயலாளராக இருப்பவர் பல்வந்த்ராய்மேதா அவர்களாவர். அவர் அடிக்கடி பொதுவாகக் காங்கிரஸ் கட்சியினருக்கும், குறிப்பாக சட்டசபை உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நிமிடத்திற்கு நிமிடம் அறிவுரைகளை அள்ளி அள்ளி விசிக்கொண்டே உள்ளார். நாள் தவறினாலும் தவறும், அவர் ஏதாவது ஒரு புது சிக்கல் பற்றிக் குறிப்பிட்டு, அச்சிக்கல் தவிர்க்கும் வழி கூறாமல் இருப்பது கிடையாது. அவ்வளவு சிக்கல் காங்கிரசில் மலிந்து கொண்டே இருப்பதால், அறிக்கை மேல் அறிக்கை விட்டவண்ணம் இருக்கும் தொல்லையும், பல்வந்த்ராயை விட மறுக்கிறது!

காங்கிரஸ் கட்சி பெயரால் ஒரு தேர்தலில் நின்று, வாக்காளர்களின் ஆதரவு பெற்று வெற்றி பெற்றவர், காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி, அப்பதவியுடன் வேறு கட்சியில் சேரக்கூடாது எனவும், அப்படி வேறு அரசியல் கட்சியில் சேருவதானால், அவர் தேர்தல் மூலம் பெற்ற பதவியையும் விட்டு விட்டுச் சேரவேண்டுமெனவும், பல்வந்த்ராய் மேதா, அறவழி வகுத்தருளியுள்ளார். வரவேற்கத்தக்கது — மற்றக் கட்சியினர் பின்பற்றத்தக்கது.

டெல்லி மேல்சபை காங்கிரஸ் உறுப்பினரான திரு. கொச்சி சி. நாராயணப் பிள்ளை என்பவர் காங்கிரசிற்கு எதிரான செயலில் ஈடுபட்டாராம். இரண்டாண்டு காலம் காங்கிரசை விட்டு விலக்கி வைக்கப் பட்டிருக்கிறார் அவர்.

எனவே, காங்கிரஸ் கட்சியினர் என்ற முறையில் டில்லி மேல்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் பதவியையும் அவர் துறந்துவிட வேண்டும் என மேதா அறிவித்துள்ளார்.

ஒரு கட்சியினர் பெயர்கூறி, தேர்தலில் பதவி பெற்றவர், அக்கட்சிக்கு எதிராக நடந்து கொண்ட பிறகு, அக்கட்சியினால் பெற்ற பதவியையும் துறந்துவிடுவதுதான் முறை—நியாயம் என்பது மேத்தாவின் வாதம். அனைவரும் இதை நியாயமென்றே ஒப்புவர்.

தன் கட்சி பெயர்கூறி சட்டசபை உறுப்பினர் பதவி பெற்ற ஒருவர், அக்கட்சிக் கட்டுப்பாட்டை மீறுகிற பொழுது, அக்கட்சியினால் அவருக்குக் கிடைத்த புதிய பதவியையும் விட்டுவிட வேண்டும் என்று அறம் கூறும் மேத்தா, வேறு அரசியல் கட்சிகளின் பெயரால் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பதவி பெற்ற பின்னர், அவர்கள் காங்கிரசில் சேருவதற்கும், தம் கட்சியினருக்கும் போடும் நிபந்தனையையே போட முன்வர வேண்டுவதுதான் முறை. ஆனால் மேத்தா என்ன செய்கிறார்? இதுவரை காங்கிரஸ், குறிப்பிட்ட இத்துறையில் எப்படி நடந்துகொண்டு வந்திருக்கிறது?

அதே மேத்தா, ஐதராபாத் காங்கிரஸ்காரர்களுக்கு, பிற கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியில் சேர விரும்பினால், அவர்களை எவ்வாறு காங்கிரசிற்குள் சேர்த்துக் கொள்வது என்பதற்கும் அறிவுரை கூறியுள்ளார்!

ஏற்கனவே உள்ள காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்களில், மூன்றில் இரண்டு பகுதி எண்ணிக்கையினர், காங்கிரசில் சேர விழையும் பிற கட்சி சட்டசபை உறுப்பினரை ஆதரித்துச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே, மேத்தா வகுத்துள்ள வழியாகும்.

இரண்டு இனத்திலும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மேத்தா கூறியுள்ளதில் காணப்படும் முரண்பாட்டையும், சொந்தக் கட்சிக்கு ஒரு முறையையும், பிற கட்சிக்கு வேறு ஒரு முறையையும் வழங்கி இருக்கும் மனு போக்கையும், பொது மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இத்தகைய அரசியல் ஒழுக்கக் கேட்டால், நாட்டின் அரசியல் துறை நாறிப் புழுத்துப் போய் இருக்கிறது. அரசியல் துறை என்றாலே, மக்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் ஒருபயங்கரத்தன்மை உருவாகி வருவதற்கு, மேத்தாவின் மனு முறையே காரணமாகும் என்பதில் ஐயமில்லை.

## இந்திய ரயில்வேக்களுக்கு வெளிநாட்டுச் சாதனங்கள்

இந்திய ரயில்வேக்களுக்குத் தேவையான சுமார் 2,500 டன் சாமான்கள், இத்தாலி. பிரான்ஸ், ஆஸ்டிரியா ஆகிய நாடுகலிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்துள்ளன. இந்தச் சாமான்களை தயாரித்துத் தருமாறு இந்திய ரயில்வே போர்டு, அந்தந்த நாடுகளைக் கேட்டிருந்தது.

ஆஸ்டிரியாவில் தயாரான 10 இஞ்சின்கள், இத்தாலியில் தயாரான 1300 டன் இருசுகள், பிரான்சில் தயாரான 900 டன் ரயில் பாதைகள் ஆகியவையே இப்போது வந்துள்ள சாமான்களாகும்.

10 இஞ்சின்களும் மத்திய ரயில்வேக்கும், இதர சாமான்கள் வடக்குப் பகுதி ரயில்வேக்கும் ஒதுக்கப்பட்டுள்ளனவாம்.

ஆஸ்டிரியாவிலிருந்து இந்தியா வாங்கவிருக்கிற 100 இஞ்சின்களில் ஏற்கனவே 16 இஞ்சின்கள் வந்து விட்டன.

# 'பயங்கர' இயக்கத் தலைவர் கைது

## கெனியாவில் மேலும் வெள்ளையர் நடவடிக்கை

கெனியாவில், வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெறும் 'மாவ் மாவ்' இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவரான 'பீல்டு மார்ஷல்' கலேபா என்பவர், வெள்ளைத் துருப்புக்களால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிகிறது.

கெனியா மலைச்சாரலில் உள்ள குகை ஒன்றில் மறைந்திருந்த அவரை, இராணுவத்தினருக்கு யாரோ துப்புக் கூறியதின்பேரில், துருப்புகள் அவரைக் கைது செய்திருக்கின்றன.

அவருடன் ஒரு பெண்மணி உட்பட வேறு மூவரும் இருந்திருக்கின்றனர்; அவர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கலேபா, கெனியா முழுவதற்குமாத 'மாவ் மாவ்' இயக்கத்தின் தலைவராக கடந்த ஜனவரி மாதத்தில் பொறுப்பேற்றுக் கொண்டாராம்.

கடந்த ஜனவரியில்தான் 'ஜெனரல் சைனு' என்ற தலைவர் கைது செய்யப்பட்டார்.

கலேபாவும், இதரரும், தங்களை இராணுவத்தினர் கைது செய்த போது தடுக்கவில்லையாம்.

சுமார் 10 நாட்களுக்கு முன், 'மாவ் மாவ்' இயக்கத்தினர், ஒரு வீட்டினுள் புகுந்து, அருண்டேல் கிரே லீக்கி என்ற ஒரு வயோதிகரைப் பலாத்காரமாகக் கடத்திச் சென்றனர் என்ற செய்தி வெளியாகியதல்லவா? அன்று கடத்திச் செல்லப்பட்ட மனிதர் என்ன ஆனார் என்பது குறித்து, கலேபா தகவல் தரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று நம்பப்படுகிறதாம்.

'ஜெனரல் சைனு' கைது செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகு, 'ஜெனரல் தங்கனேக்கா'வைப் போன்றே கலேபாவும், "பயங்கரவாதிகள் அத்தனை பேரையும், 'ஜெனரல் சைனு'வின் உதவியுடன் சரணடையச் செய்வது" என்பதுபற்றி நடைபெற்ற பேச்சு வார்த்தைகளையொட்டி கலேபாவும் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 'தங்கனேக்கா'வுடன் கலேபாவும், 'மாவ் மாவ்' இயக்கத் தலைவர்களைக் காட்டினுள் சென்று சந்தித்துத் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றவர், மீண்டும் திரும்பி வரவே இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

★

## 'மாவ் மாவ்' இயக்கத்தினர்...

### இதுவரை பதினோராயிரம் பேரை பலி கொண்டனராம்!

கெனியா அரசாங்கக் காடுகள் பாதுகாப்பு இலாகா மந்திரியான லாரன்ஸ் வெல்வுட் என்பவர், கெனியா மேல் சட்டசபையில் கூறியதாவது:—

"கெனியாவில் தோன்றியுள்ள 'மாவ் மாவ்' இயக்கத்தினர், கடந்த இரண்டாண்டுகளில் சுமார் 11,000 'கிக்யூ'க்களை (கெனியாவில் வதியும் பெரும்பான்மையான ஆப்பிரிக்க மக்கள்) பலி கொண்டிருக்கின்றனர்; இது ஒரு உத்தேசமான மதிப்பீடாகும்.

இன்றைய அரசாங்கம், 'கிக்யூ'க்கள் அல்லாத வேறுபல 'விசுவாச'முள்ள குலமக்களிடையே வெள்ளையர் மீது வெறுப்புணர்வு பரவவிடாமல் தடுப்பதில்தான் அதிக கவனம் செலுத்துகிறது; ஆனால், 'மாவ் மாவ்' இயக்கத்தை ஒழிப்பது அநாகரீகத்தை அழிப்பதாகும்; அரசாங்கத்திற்கும், 'மாவ் மாவ்' இயக்கத்திற்கும் நடைபெறும் போராட்டம் நாகரீகத்திற்கும், காட்டுமிராண்டித்தனத்திற்கும் நடைபெறும் போராட்டமாகும்; எனவே, 'மாவ் மாவ்' இயக்க ஒழிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும்."

# சிங்மென் ரீயின் அமெரிக்க பக்தி கரைகிறது!

## நாணயத்தின் மதிப்பைக் குறைக்க மறுக்கிறார்

தூரக் கிழக்கு நாடுகளின் அமெரிக்கத் தளபதியான ஜெனரல்ஹல் தென்கொரிய அதிபர் சிங்மென் ரீயுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்.

அமெரிக்காவுக்கும் — தென் கொரியாவுக்கும் இடையே இப்போது சுமுகமான உறவு இல்லை என்று தெரிகிறது.

1955-ம் ஆண்டில், தென்கொரியாவுக்கு அமெரிக்கா அளிக்க இருக்கும் 700 மில்லியன் டாலர் உதவி பற்றி கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதாம்.

இந்த உதவிக்காக தென்கொரிய நாணயமான 'ஹானி'ன் மதிப்பைக் குறைத்து, டாலரின் மதிப்பை உயர்த்துமாறு அமெரிக்கர்கள் கேட்டதற்கு, சிங்மென் ரீ மறுத்து விட்டாராம்.

இந்தத் தகராறைத் தீர்க்குமாறு, ஐசன்ஹோவர், ஜெனரல் ஹாலை அனுப்பினார் என்றும், அவரிடம் தனியாக, ரீக்கு, அமெரிக்காவுடன் ஒத்துழைக்குமாறு செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார் என்றும் தெரிகிறது.

ஒரு டாலருக்கு 180 'ஹான்' என்றிருந்ததை 254 'ஹானு'க அமெரிக்கர்கள் உயர்த்தினார்களாம். தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக்கொள்ள சிங்மென் ரீ ஒப்புக்கொள்ளவில்லை என்று தெரிகிறது.

இந்த முறையை எதிர்த்து, தென் கொரியா, அமெரிக்கத் துருப்புகளுக்கு அளித்துவந்த முன் பணத்தை நிறுத்திவிட்டதாம்.

இதன் காரணமாய் கொரியாவில் உள்ள ஐ. நா. படையில் இருக்கும் 1,00,000 கொரியர்கள் சென்ற மாத இறுதியிலிருந்து சம்பளம் பெருது இருக்கிறார்களாம்.

பின்னர் வந்த செய்திகளின்படி ரீ-க்கும் ஜெனரல் ஹாலுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் தோல்வி அடைந்துவிட்டன என்று, இரண்டு நாள் பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர்-ஜெனரல் ஹால் கூறியதாகத் தெரிகிறது.

1,00,000 கொரியத் துருப்புகளுக்கு 500 'ஹான்' வீதம் சம்பளம் அளிக்கப்படுமென்றும், ஒரு டாலருக்குக் குறைந்த தொகைகள் தென் கொரிய நாணயத்திலேயே அளிக்கப்படும் என்றும் ஹால் மேலும் தெரிவித்தாராம்.

நாணய மதிப்பு பிரச்சினையில் சிங்மென் ரீ பிடிவாதமாக இருக்கிறார் என்று தெரிகிறது.

# திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் ஆரம்ப விழா

## எம். ஜி. ராமச்சந்திரன் திறந்து வைத்தார்

திருவனந்தபுரம், அக். 22—

திருவனந்தபுரம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் திறப்பு விழா இன்று மாலை 5–30 மணிக்கு ஆண்டாள் லாட்ஜிலுள்ள திருவனந்தபுரம் தி. மு. கழகக் காரியாலயத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு தோழர் இரா. ஜெயராம் தலைமை தாங்கினார்.

தோழர் ஏ. கிருட்டிணன் தி. மு. கழக சார்பிலும், தி. மா. மு. கழகச் சார்பிலும் தோழர் எம். ஜி ராமச்சந்திரனை வரவேற்றுப் பேசினார்.

பிறகு தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தி கழகத்தைத் திறந்து வைத்தார்.

தி. மு. கழகச் சார்பிலும், தி மா. மு. கழகச் சார்பிலும் தோழர் ராமசசந்திரனுக்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன.

செயலாளரின் நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

* * *

21-ந் தேதி திருவனந்தபுரம் சித்ரா தியேட்டரில் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தாரின் "இன்பக் கனவு" நாடகம் நடைபெற்றது.

# ஆசிய மாணவர் நல உதவி

நவம்பர் 15-21 தேதிகளில் நடக்கும் சர்வதேச மாணவர் வாரத்தில், ஆசிய மாணவர் நலனுக்கு உதவ விரிவான முறையில் பிரிட்டனில் நிதி திரட்ட "உலக சர்வ கலாசாலைப் பணி"யின் பிரிட்டிஷ் கிளை திட்டமிட்டிருக்கிறது.

சர்வகாலாசாலை மாணவர்களின் ஆரோக்கியத்திற்கும், வைத்திய உதவிக்கும் இந்த நிறுவனம் பணியாற்றி வருகிறது.

இந்தியா, ஜப்பான், பாகிஸ்தான், இந்தோனேஷியா நாடுகளில் மாணவர்களுக்காக புதிய ஆரோக்கிய நிலையங்களை ஏற்படுத்தவும், இந்தியா, பாகிஸ்தான், கொரியா, மத்திய கிழக்கு நாடுகளில் சர்வதேச மாணவர் இல்லங்கள் கட்டவும் சுமார் 4,50,000 பவுன்கள் நிதி திரட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

# இந்தியாவிற்கு 30,000 டன் சர்க்கரை

## கிழக்கு ஜெர்மனி அனுப்பும்

இந்தியாவிற்கு இன்னும் சில வாரங்களில், சுமார் 30,000 டன் சர்க்கரை கிழக்கு ஜெர்மனியிலிருந்து வரவிருக்கிறது என்ற தகவலை, கிழக்கு ஜெர்மனியிலிருந்து இந்தியா வந்திருந்த வர்த்தக தூதுக் குழு வெளியிட்டுள்ளது.

மேலும் அந்தத் தூதுக் குழுவின் தலைவர், "ஜெர்மனி, இந்தியாவிற்கு இயந்திரங்களையும், இயந்திர சாதனங்களையும் தரத் தயாராக உள்ளது. ஜெர்மனிய இயந்திரங்கள், இந்தியாவில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களுக்கு வெகுவாகப் பயன்படும்! இந்தியாவின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு துணைபுரிய ஜெர்மானிய தொழில் நிபுணர்கள் எப்போதும் தயாராயிருக்கின்றனர்," என்றும் கூறினார்.

# விற்பனை வரியை ஒருமுனையில் வசூலிக்க.....

## முதலமைச்சரிடம் முறையீடு!

"சர்க்காருக்குக் கண்ணில்லையா, காதில்லையா என்று கேட்கப்பட்டிருக்கிறது; தொழில், விவசாயம், வியாபாரம் இவை நன்றாக நடைபெற்றால்தான் அரசாங்கமும் நன்றாக நடைபெறும்; அரசாங்கத்தின் வேலையும் அதுதான்; வரி செலுத்துவதற்கு இயலாமல் சின்ன வியாபாரிகள் கூட சிறை செல்ல நேரிட்டதென்றால் அது வருந்தத்தக்கதோர் காரியந்தான்; வியாபாரிகள் கெட்டுப்போக அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருக்காது; அதை மாற்றியமைக்கத் தாமதம் ஏற்பட்ட காரணம் 'அப்படிச் செய்தால் வரிப்பணம் வருமா' என்பதுதான். ஒரு முனை வரிபற்றிப் பேசி, யோசித்து முடிவிற்கு வர பல கஷ்டங்கள் உண்டு; ஆனால், அவசரப்படக் கூடாது; எதற்கும் நம்பிக்கை வேண்டும்,"

என்று, வாணியம்பாடியில், வர்த்தக சங்கத்தாரால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது, சென்னை முதலமைச்சர் காமராசர் கூறினார்.

முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில், வரி செலுத்த இயலாமல் சுமார் 10,000 பேர் சிறை சென்றுள்ளதாகக் குறிப்பிட்டு, அரசாங்கத்துக்கும், வியாபாரிகளுக்கும் தொல்லையில்லாத வகையில் பல கட்ட விற்பனை வரியை மாற்றி ஒரு முனையில் விற்பனை வரி விதிக்கக் கேட்டுக்கொண்டும், சென்னை மாநில வர்த்தகர் சம்மேளனத்தின் தூதுக் குழுவினரின் திட்டப்படி சர்க்காரும், வர்த்தகர்களும் கொண்ட குழு ஒன்றை நிறுவி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுமாறும் கண்டிருந்தது.

## புதிய 'ஆட்டோ-ரிக்ஷா'

நான்கு பேர் உட்காரக்கூடியதும், மணிக்கு 30 மைல் வேகத்திலும், காலனுக்கு 70 மைல்கள் ஓடக்கூடியதுமான புதிய 'ஆட்டோ-ரிக்ஷா'க்கள் வெகு விரைவில் இந்தியா வரவிருக்கின்றன.

## சிவகெங்கை பாண்டியன் நினைவுப் படிப்பகம்

12—10—54 அன்று, தோழர் மணவாளன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்றத்தின் தேர்வுக் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: நா. இராமச்சந்திரன்; துணைச் செயலாளர்: முரு. சுப்பிரமணியன்; பொருளாளர்: இரா. கூளு; பொறுப்பாளர்: சி. கணபதி. செயற்குழு உறுப்பினர்கள்: இரா. கூளு. சி. கணபதி, முரு. சுப்பிரமணியன், நா. இராமச்சந்திரன், சி. மாரி, வேலாயுதம், தி. சோமசுந்தரம்.

## தமிழ்மொழி பாதுகாப்பு மாநாடு

13—10—54ல், தூத்துக்குடி வள்ளுவர் கழகச் சார்பில், தோழர் மோசஸ் தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில், தமிழ் மொழி பாதுகாப்பு மாநாடு, திருவாங்கூர், இலங்கைத் தமிழர்கள் ஆதரிப்பு மாநாடு ஆகியவைகளை, நவம்பர் மாதம் 27. 28-ம் நாட்களில் நடத்துவதற்கான நிர்வாக அமைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— வரவேற்புக் குழுத் தலைவர்கள்: ஏ. வி. அருணசலம், எஸ். எஸ். சுந்தரம்; செயலாளர்கள்: வே. ஏசுதாசன், பி. வி. முத்தையா; பொருளாளர்கள்: ஞா. மோசஸ், எஸ். சக்கரை; பொறுப்பாளர்: வே. ஏசுதாசன்; விளம்பரச் செயலாளர்கள்: எம். டி. பிரீஸ், எஸ். ஜான்டேவிட்.

## திருப்பரங்குன்றம் திராவிடர் பகுத்தறிவு மன்றம்

3—10—54ல், தோழர் இல. அ. நாதன் தலைமையில் நடைபெற்ற மன்றத்தின் முதலாவது ஆண்டு விழா பொதுக்கூட்டத்தில், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றியுள்ள நற்பணிகள் பற்றியும், இனிமேல் நடக்கவிருக்கும் செயல்கள் பற்றியும் தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. எஸ். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், மதுரை தொழில் கோர்ட்டாரின் தீர்ப்பின்படி தொழிலாளர்களுக்கு 4 மாத போனசை உடனடியாகக் கொடுக்கும்படி மதுரை ஆர் வி மில் நிர்வாகத்தினரைக் கேட்டுக்கொண்டும், திருப்பரங்குன்றம் மயானத்தில், தங்குவதற்கு ஓர் தகரக் கொட்டகையும், விளக்கு, கிணறு, கக்கூஸ் வசதிகள் செய்து தரவும், கிராம மக்களுக்கு குடி தண்ணீர் வசதிக்காக அரசாங்கம் அனுமதித்திருக்கும் உத்திரவை உடனடியாக அமுல் நடத்தக் கோரியும், அவ்வூர் பஞ்சாயத்து போர்டாரைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## எம். ஐ. டி. தொழிலாளர் சங்கம்—குரோம்பேட்டை

15—10—54 மாலை 6-30 மணிக்கு மேற்படி தொழிற்சங்கக் கட்டிடத்தில் தோழர் ஜி. எம். மதுரையார் தலைமையில் நடைபெற்ற சங்க நிர்வாகக் குழுவினர் கூட்டத்தில், பழிவாங்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்களை மீண்டும் சம்பளத்துடன் வேலைக்கு எடுத்துக் கொள்ளவும், ஆறு மாதங்களுக்குக் குறையாமல் வேலை செய்யும் தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக நியமித்து 4 அணு வீதம் பஞ்சப்படி கொடுக்கவும், அடிப்படை சம்பளத்தில் 50 சதவிகிதம் உயர்த்தவும், தொழிற்சாலை சட்டப்படி (ஆக்ட்) 'ஏர்ன் லீவு' கொடுக்கவும், 22 நாட்களுக்குப் பண்டிகை லீவும், 15 நாட்களுக்கு 'காஷுவல்' லீவும், 15 நாட்களுக்கு முழுச் சம்பளத்துடன் (பஞ்சப்படி உள்பட) 'மெடிகல்' லீவு கொடுக்கவும், வருடாந்திர சம்பள உயர்வு, நபர் ஒன்றுக்கு 4 அணு வீதம் கொடுக்கவும், 'ஓவர் டைம்' வேலை செய்பவர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம் தரவும், 'பிராவிடெண்ட் பண்டு' முறையை அமுல் நடத்தவும், எல்லோருக்கும் இலவச உடை கொடுக்கவும், ஆண்டொன்றுக்கு ஒரு மாதச் சம்பளம் (பஞ்சப்படி உள்பட) 'கிராஜுடி' கொடுக்கவும், மேற்படி தொழிற் சங்கத்தை அங்கீகாரம் செய்யவும் ஆகிய கோரிக்கைகளைப் பெற, எம். ஐ. டி. டைரெக்டர்களைக் கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

## சொற்பொழிவுப் போட்டி

சென்னை மாணவர் மன்றச் சார்பில் சென்ற மாதம் நடைபெற விருந்த திரு. வி. க. சொற்பொழிவுப் போட்டி, 14—11—54ல் நடைபெறும். 7—11—54-க்குள் அப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் விண்ணப்பமும் கட்டணமும் அனுப்பி வைக்க வேண்டும். வெளியூர் மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.

முதற்பரிசு: வெள்ளிக்கோப்பை; இரண்டாம் பரிசு: வெள்ளிப் பதக்கம்; மூன்றும் பரிசு: தமிழ் நூல்கள், நன்மதிப்பிதழ்கள்.

விவரத்துக்கு :— 17, இரத்தின முதலி தெரு, சென்னை—1.

## பாராட்டுக் கூட்டம்

15—10—54 இரவு 7 மணிக்கு, அரியலூர் தாணுச்சாவடி முன்பாக, சென்ற மாவட்டக் கழகத் தேர்தலின்போது திருச்சி—அரியலூர் தொகுதியில் சுயேச்சையாக நின்று காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்ற தாமரைக்குளம் தி. மு. கழக மாவட்டப் பிரதிநிதி தோழர் கு. தங்கவேலு அவர்களைப் பாராட்டி தோழர் எஸ். வரதராசன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் பி. ஆர். சின்னசாமி, கோ. சிவபெருமாள் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## "தூக்குத் தூக்கி" பொன் விழா

17-10-54ல் ஈரோடு கிருஷ்ணா தியேட்டரில், 'தூக்குத் தூக்கி' படத்தின் 50-வது நாள் பொன் விழா தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, நடிகர் டி. எஸ். பாலையா முதல், இரண்டாவது காட்சிகளின் இடைவேளைகளில் மேடையில் தோன்றி சொற்பொழிவாற்றினார். அவருக்கு பரிசுகள் பல வழங்கப்பட்டன.

## சென்னை மாணவர் மன்றம் வருத்தம்

"சென்னை முன்னாள் மேயர் சி. தாதுலிங்க முதலியார் பிரிவு அவர்கள் குடும்பத்திற்கு மாத்திரமேயன்றி நாட்டுக்கே பேரிழப்பாகும்; என் செய்வது? மரணம் தவிர்க்க முடியாதது; அஃதறிந்து நாம் ஆறுதல் அடைதல் வேண்டும்" என்று சென்னை மாணவர் மன்றச் சார்பில் வருத்தம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# கழகச் செய்திகள்

## மூவலூரில் தி. மு. க. துவக்க விழா

மூவலூர் சுந்தரம் பூங்கா அருகில் தோழர் க. ராமையா தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் தோழியர் எ. பி. செல்லக் கண்ணம்மாள் கழகக் கொடியை ஏற்றுவித்து சொற்பொழிவாற்றிய பின் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி இன்றைய சமுதாயச் சீர்கேடுகளைப் பற்றி விளக்கமாக்கூறினார். பின்னர் வட்டாரத் தலைவர் தோழர் சி. கனகசபை, என். கிட்டப்பா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## திருமழிசை தி. மு. கழக முதலாண்டு விழா

12—10—54 மாலை 6 மணிக்கு, கெங்கைகொண்டான் மண்டபத் தெருவில், தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழக முதலாண்டு விழாவில், தோழர்கள்; சி. வி. எம். அண்ணாமலை, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிட நாடு பிரிவினையின் அவசியம் பற்றியும் விரிவாகப் பேசினர். தோழர் டி. கே. போரூரன் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார்.

## அரிமழம் தி. மு. கழக இரண்டாம் ஆண்டு விழா

16—10—54 காலை 8 மணிக்கு தோழர் கதிரவன் தலைமையில் நடைபெற்ற கழக இரண்டாவது ஆண்டுவிழாப் பொதுக் கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு சொற்பொழிவாற்றியபின்னர், மாவட்டக் கழகத் தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்கள் கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அம்பில் தர்மலிங்கம், ஆகியோரைப் பாராட்டியும், தென்னாற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் பூமிக்கடியில் கிடக்கும் கனிப் பொருட்களை வெளியே எடுத்துத் தரும்படி சென்னை முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டும், சென்னை கவர்னரின் சம்பளக் கொள்ளையைக் கண்டித்தும், அரிமடம் உயர்நிலைப்பள்ளியில் நிலவும் வகுப்புவாதபோக்கை கண்டித்தும், அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்க திருச்சி மாவட்ட நகராண்மைக் கழகத்தைக் கேட்டுக் கொண்டும், தேசிகவினாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மேட்டுப்பாளையம் தி. மு. க.

11—10—54-ல் தோழர் கொ. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: க. இராமன்; துணைச்செயலாளர்: தா. அப்துல் ரகிமான்; பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி: கு. சண்முகம்; செயற்குழு உறுப்பினர்கள்: வீ. சண்முகம், ப. முத்துவேல், கொ. சிவஞானம், தங்கவேல், ப. கோதண்டபாணி, இராமையன், சே. மு. சுல்தான், தா. மஸ்தான்

## குறள் மாநாடு

19—10—54 மாலை 5 மணிக்கு, மதுரை திராவிடர் இளைஞர் கழகத்தின் சார்பில், கழகப் பணிமனையில் தோழர் கே. பி. இராஜன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், வருகிற நவம்பர் திங்கள் 21-ந் தேதியன்று மதுரையில் "குறள் மாநாடு" கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டு, அம்மாநாட்டு நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது:— பொறுப்பாளர்: டி. என். மீனாட்சி சுந்தரம்; செயலாளர்கள்: டி. எஸ், சாரங்கபாணி, உ. சண்முகம், செயற்குழு உறுப்பினர்கள்: இ. கிருஷ்ணன், எஸ். ரெங்கநாதன், மா. மகாலிங்கம், வீ. இலட்சுமி நாராயணன், எஸ். முத்துகிருஷ்ணன்.

# மந்திரி சபையில் சேர கான் சாகிபுக்கு முகமது அலி அழைப்பு

## லீகர்களின் எதிர்ப்பும், வரவேற்பும்

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரிக்கை

கராச்சி, அக். 26—

பலருடைய வரவேற்புக்கும், சிலருடைய சந்தேகப் பார்வைகளுக்கும் இடையே பாகிஸ்தானில் திருத்தியமைக்கப்பட்ட மந்திரி சபை பதவி ஏற்றிருக்கிறது. பாகிஸ்தான் பத்திரிகைகள் இந்த மாறுதல்களைப் பொதுவாக வரவேற்றிருக்கின்றன. முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் மட்டும், 'கவர்னர் - ஜெனரல், அரசியல் நிர்ணய சபையைக் கலைக்க அதிகாரம் பெற்றவரா?' என்று தங்களுக்குள்ளே விவாதிக்கின்றனர்; ஆயினும் வெளிப்படையாக ஏதும் சொல்ல இயலாது இருக்கின்றனர்.

அரசியல் நிர்ணய சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரான சட்டோபாத்தியாயா, அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டமைக்கு தான் மகிழ்ச்சியடைவதாகவும், சிறுபான்மையினரால் நிராகரிக்கப்பட்ட அரசியல் அமைப்பை அவர்கள் மீது திணிக்க லீக் கட்சியினர் முயன்றால் அது பயன் தராது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆசாத் பாகிஸ்தான் கட்சியின் தலைவர் இப்தீகாருதீன், பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது தனக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும் என்று கூறியிருக்கிறார்.

எல்லை மாநில செஞ்சட்டைப் படைத் தலைவரான கான் அப்துல் கபார்கான், தான் இதுபற்றி வருத்தப்படவில்லை என்றும், ஆனால் அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பதில் கையாளப்பட்ட முறை சரியானதுதானா என்று தான் சந்தேகிப்பதாகவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் சோஷலிஸ்டு கட்சியினர் புதிய அரசியல் மாற்றங்களை வரவேற்றிருப்பதுடன், கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சியை திரும்பப் பெறவேண்டுமென்றும், அரசியல் கைதிகளை விடுதலை செய்து, மக்களின் உரிமைகளை நிலைநாட்டி, நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டுமென்றும் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

**முகமது அலியினால் திருத்தியமைக்கப்பட்டிருக்கிற புதிய மந்திரி சபையில் டாக்டர் கான் சாகிபையும் சேர்த்துக் கொள்ள முயற்சி நடைபெறுகிறதாம்.**

சூரிச் நகரில், மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் எச். எஸ். சுஹ்ரவர்த்தி, இப்போது பாகிஸ்தானில் நடைபெற்றுள்ள மாற்றங்களைத்தான் முன்கூட்டியே எதிர்பார்த்ததாகக் கூறியுள்ளார்.

"இப்போது கலைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை மக்களின் பிரதிநிதித்துவம் கொண்டது அல்ல; அது மக்களுக்குத் தகுதியான அரசியல் திட்டத்தை வகுக்க திறமை கொண்டது அல்ல; இந்தத் தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் மோதிக்கொள்வதை நான் எதிர்பார்த்தேன்; ஏனெனில், மக்களின் உண்மைப் பிரதிநிதிகள்தான் ஒருவருக்கொருவர் சமரச மனப்பான்மையுடன் நடந்துகொள்ள இயலும்,"

என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

"அரசியல் அமைப்பு நிலை பெற்றிருக்க வேண்டுமென்பது மிகவும் அவசியமானதாகும்; முதலில் ஒரு திட்டத்தை வகுத்து, பின்னர் அதைத் திருத்துவதை நான் ஒப்புக்கொள்ளுவதில்லை; அது குழப்பத்தையே விளைவிக்கும்" என்று சுஹ்ரவர்த்தி மேலும் கூறினர்.

★

### கிழக்கு வங்க ஐக்கிய முன்னணியின் ஆதரவு!

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்து, நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்து மந்திரி சபை அமைத்து பாகிஸ்தான் கவர்னர் பிறப்பித்துள்ள உத்திரவை கிழக்கு பாகிஸ்தான் ஐக்கிய முன்னணிக் கட்சியினர் வெகுவாக வரவேற்றுள்ளனர் எனத் தெரிகிறது.

ஐக்கிய முன்னணியினர், கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லீம் லீக் கட்சியைப் படுதோல்வியடையச் செய்தனர் என்பது நினைவிலிருக்கலாம்.

ஐக்கிய முன்னணியின் சார்பில் அமைந்த மந்திரியின் முதல்வராயிருந்த பஸ்லுல் ஹக், கவர்னரின் நடவடிக்கை குறித்து, கருத்தறிவிக்க மறுத்துவிட்டார்.

ஹக் மந்திரி சபை, சில மாதங்களுக்கு முன்னர், பாக். கவர்னரால் கலைக்கப்பட்டது ஞாபகமிருக்கக் கூடும்.

ஐக்கிய முன்னணியினர், பாக். கவர்னரின் செய்கையை வரவேற்ற போதிலும், கிழக்கு பாகிஸ்தான் முஸ்லீம் லீகினர், அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது, அரசியல் சட்ட விரோதமானதாகுமெனக் கண்டித்துள்ளனராம்.

கலைக்கப்பட்ட ஹக் மந்திரி சபையில் அங்கத்தினராயிருந்த அப்துல் சலாம் கான் என்பவர், அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது குறித்து திருப்தி தெரிவித்திருக்கிறாராம்.

கிழக்கு வங்கத்தில், கவர்னர் ஆட்சி முடிவு கட்டப்பட்டு, சட்ட சபை ஆட்சி துவங்கப்பட்டு, புதியதாக அமைக்கப்படவிருக்கும் அரசியல் நிர்ணய சபைக்கு, அந்த சட்ட சபைக்கு, அந்த சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்று, தான் நம்புவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

இன்று ஏற்பட்டுள்ள நிலைகளினால் பாகிஸ்தானின் கௌரவம் வெகுவாகக் குறைந்துவிட்டதாகவே, தான் கருதுவதாக, கிழக்கு வங்க மாநில முஸ்லீம் லீக் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஹக் மந்திரி சபையின் இன்னுமொரு உறுப்பினராயிருந்தவரும், அரசியல் சபை கலைக்கப்பட்டதை வரவேற்றுள்ளார்.

வடமேற்கு எல்லைப்புற மாநில முதன் மந்திரி கூட, ஒரு அறிக்கையின் மூலம் கவர்னர்-ஜெனரலின் செய்கையை வரவேற்று, "மக்கள் தொடர்ந்து ஜனநாயக அமைப்புகளில் நம்பிக்கை வைக்க உதவக் கூடியது" என்று பாராட்டியுமிருக்கிறார்.

★

### மாறுதலில்லையாம்!

பாகிஸ்தான் மந்திரி சபை புதுப்பிக்கப்பட்டதாலும், அ. நி. சபை கலைக்கப்பட்டு விட்டது காரணமாகவும், பாகிஸ்தான் வெளிநாட்டுக் கொள்கைகளில் எந்தவிதமான மாறுதல்களும் ஏற்படாது என நம்பப்படுகிறது.

★

### நாராயணகஞ்சில் 144

டாக்கா மக்களோ நீண்டதோர் பெருமூச்சுடன் இந்த மாற்றத்தை வரவேற்கிறார்கள்.

சிட்டாகங்கில், கவர்னர்—ஜெனரல் வாழ்க' என்ற கோஷத்துடன் மக்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

தொழில் நகரமான நாராயணகஞ்சில் முன் எச்சரிக்கையாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

## புறப்பட்டுவிட்டது!

அமெரிக்கா — பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தப்படி, டாங்கிகள், குண்டுகள் ஆகிய பல்வேறு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்கக் கப்பல் ஒன்று நியூயார்க்கிலிருந்து பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது.

## சமுதாய - நலத் திட்டங்கள்

### நிலமில்லாத ஏழைகளுக்கு பயன்தரவில்லை!

மைசூர் மாநாட்டினரின் கருத்து!

"சமுதாய நலத் திட்டங்கள் நாட்டு மக்களில் எல்லா பிரிவினருக்கும் குறிப்பாக நிலமில்லா ஏழைகளுக்கு பயன் அளிக்கவில்லை,"

என்று மைசூரில் மூன்று நாட்களாக நடைபெற்ற சமுதாய நலத் திட்ட பிரதேசவாரி மாநாட்டினர் கண்டறிந்தனர் என்று தெரிகிறது.

இந்த மாநாட்டில் மைசூர், ஆந்திரா, சென்னை, திரு-கொச்சி ஆகிய மாநிலங்களில் சமுதாய நலத் திட்டத்தில் தொடர்பு கொண்ட மாவட்ட அதிகாரிகள், அபிவிருத்தி அதிகாரிகள், சமுதாய நலத்திட்ட ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"சமுதாய நலத் திட்டத்திற்குப் பொது மக்கள் அளிக்க வேண்டிய பங்கினைக் குறைத்து, நிலமில்லாத ஏழைகளுக்கு இத் திட்டங்களில் பங்கு அளிக்க வேண்டியது அவசியம்,"

என்று மேற்படி மாநாடு கருதியதாம்.

மேலும் இந்த மாநாடு, பல அம்சங்கள் எதிர்பார்த்தபடி என் பணியாற்றவில்லை என்பதைஆராய குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்று மத்திய சமுதாய நலத் திட்டக் குழுவைக் கேட்பதென முடிவு செய்ததாம்.

## ஆந்திர மந்திரிசபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

ஆதரிக்க பி. - சோ. கட்சி முடிவு

ஆந்திர மந்திரி சபையின்மீது, அக்டோபர் 29-ந் தேதி ஆந்திர சட்டசபையில் வரவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பது என ஆந்திர மாநில பிரஜா-சோஷலிஸ்டு கட்சி முடிவு செய்துள்ளது.

ஆந்திர மாநில பி.-சோ. கட்சி நிர்வாகக் குழு கூட்டத்தில் மேற்படி முடிவிற்கான தீர்மானம் நிறைவேறியதாம்.

கே. சூரியநாராயணா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வெளியார் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிகிறது. இந்த முடிவை சில உறுப்பினர்கள் எதிர்த்தனர் என்றும், ஆனால் பெருவாரியானவர்கள் தீர்மானத்தை ஆதரித்தனர் என்றும் தெரிகிறது. இந்த முடிவு மாநில பி. - சோ. கட்சிக் குழுவினால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிகிறது.

## இறுதி சந்திப்பு!

பிரதமர் நேருவும், சீன ஜனாதிபதியும் இறுதி முறையாகச் சந்தித்துப் பேசினார்கள். இது நேருவின் விடைபெறும் சந்திப்பு என்று பீகிங் வானொலி கூறியது.

## கிராம மக்கள்-போலீஸ் குழு கைகலப்பு

துப்பாக்கிப் பிரயோகத்தில் **2** பேர் பலி

ஆமதாபாத்திலிருந்து 45 மைல் தொலைவிலுள்ள மேகசேனா மாவட்டத்தைச் சேர்ந்த சித்திரோதிபுரா கிராமத்தில் போலீசாருக்கும், கிராமவாசிகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையொன்றில், இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும், ஒரு பெண் உள்பட 4 பேர் காயமுற்றதாகவும். 15 போலீசாரும், 'ஹோம் கார்டு'களும் காயம் பட்டதாகவும் தெரிகிறது;

குழப்பத்தின்போது பிச்சுவாக்கள், கத்திகள், கற்கள் ஆகியவற்றை உபயோகித்ததாகக் கூறப்படுகிறது.

இது பற்றிய அறிக்கையொன்றில், கட்டுக்கடங்காத கூட்டத்தார் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக 2 பேர் கொல்லப்பட்டும், 4 பேர் காயம்பட்டார்கள் என்றும் காணப்படுகிறது.

## மலேயாவில் தமிழ்க் கல்வி!

டாக்டர் அழகப்பா தரும் தகவல்

சென்னை, அக். 24—

சிங்கப்பூர், மலேயா, மற்றும் ஏனைய இடங்களிலும் புதிய பள்ளிக்கூடங்களைத் துவக்க இந்தியர்கள் எண்ணியுள்ளனர் என்ற தகவலை டாக்டர் ஆர். எம். அழகப்பச் செட்டியார் வெளியிட்டுள்ளார்.

செட்டியார் வகுப்பினரால் துவங்கப்பெறும் அப்பள்ளிகளில் தமிழ் மொழியும், அப்பகுதியின் மொழிகளும் கற்பிக்கப்படுமென்றும், அப்பள்ளிகளில் இந்தியக் குழந்தைகள் மட்டுமின்றி இதரக் குழந்தைகளும் கல்வி பயில அனுமதிக்கப்படுவர் என்றும் டாக்டர் அழகப்பா கூறியுள்ளார் எனத் தெரியவருகிறது.

## தலையிடாதாம்!

காமன்வெல்த் உறவு இலாகா உதவி அமைச்சர் டாட்ஸ் பார்க்கர், கோவாவின் வருங்காலம் சம்மந்தமாகப் போர்ச்சுக்கலுடன் சமாதானமான போக்கையே கடைப்பிடிக்குமென இந்தியா வாக்களித்துள்ளதாகவும், இந்தியா, போர்ச்சுகல் ஆகிய சர்க்கார்களுடன் பிரிட்டிஷ் சர்க்கார் தொடர்பு கொண்டுள்ளதால் இவ்விஷயத்தில் 'காமன்வெல்த்' தலையிடும் உத்தேசத்திலில்லை என்றும் தெரிவித்தார்.

## காலம் வரவில்லையாம்!

"ரஷ்யப் பிரதமர் மாலங்கோவை, சர்ச்சில் சந்திப்பாரா?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு விடையளிக்கும் வகையில், பிரிட்டிஷ் மக்கள் சபையில் "ரஷ்யா உட்பட்ட 4 வல்லரசு மாநாடு நடத்த இன்னும் பக்குவமான காலம் வரவில்லை," என்று சர்ச்சில் கூறினாராம்!

## ஓடிப் போனவர்கள் நாடி வருகிறார்கள்!

பார்மோசாவில் தஞ்சம் புகுந்திருக்கும் சியாங்கே - ஷேக் கூட்டத்தைச் சேர்ந்த சுமார் 3,000 - பேர்கள் சென்ற ஆண்டில் செஞ்சீனாவைச் சேர்ந்த யுன்னான் மாகாணத்தில், சரணடைந்து விட்டதாக புதிய சீனச் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளதெனத் தெரிகிறது.

### இந்தியா—சீனா விமான போக்குவரத்து

பிரதமர் நேரு, பீகிங்கில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் காரணமாக இந்தியாவுக்கும்—சீனாவுக்குமிடையே விமானப்போக்குவரத்து விஷயமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## இரா. நெடுஞ்செழியன் வருகை

"தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இலங்கையில் கடந்த 2 வார காலம் சுற்றுப் பயணம் செய்துவிட்டு 28—10—54 வியாழனன்று காலை சென்னை வந்துசேர்வார். அவரை வரவேற்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் தோழர்கள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நாளை சரியாக காலை 10 மணிக்கு வந்து கூடும்படி கேட்டுக்கொள்கிறேன்," என சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

### குறள் விழா

29—10—54 அன்று, அருப்புக்கோட்டையில், ஊ. பு. அ. சௌந்தரபாண்டியனார் படிப்பகத்தின் சார்பில் குறள் விழா நடைபெறும். திருக்குறள் வீ.முனுசாமி பேசுவார்

### திருமணம்

29—10—54 காலை 4-30 மணிக்கு, பழனி—அடிவாரம் சோழிய கவுண்டர் அறநிலையத்தில் தோழர் இலட்சுமிநாராயணன்—தோழியர் உலகநாயகி திருமணம், பழனி-அடிகள் சிவநேசம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மீ. சு. இளமுருகு, மேடைவலசு சிதம்பரனார் ஆகியோர் பேசுவர்.

## நுங்கம்பாக்கம் குறள்நெறி விழா

2-ம் நாள் நிகழ்ச்சி

26—10—54 அன்று நுங்கம்பாக்கம் குறள் நெறி விழா பேராசிரியர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின்னர் புலவர் வை. பொன்னம்பலனார், புலவர் தியாகராசன், பி. ஆர். கோகுலகிருஷ்ணன், காஞ்சி - கல்யாணசுந்தரம் ஆகியோர் குறள் நெறியின் அவசியத்தை வலியுறுத்திப் பேசிய பின்னர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

இரவு மணிவண்ணன் குழுவினரின் "கண்ணகி" நாடகம் சிறப்புற நடந்தேறியது.

தென்னிந்தியாவில்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பேசுகையில், அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒவ்வொருவரும், வேறு ஒரு இந்திய மொழியையாவது கற்கவேண்டும்; அப்போது, தென்னிந்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள பயம் போக்கப்படலாம்."

"தாய்மொழியைவிட, வேறு எந்த மொழியிலும் ஒருவருக்கு விசேஷ அறிவு இருக்காது என்பதை உலக அறிவாளிகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

"இந்தி மொழியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. தற்போது வெளிவந்துள்ள இந்திப் புத்தகங்கள் பல, ஆங்கிலத்திலிருந்தோ, வங்காளியிலிருந்தோ மொழி பெயர்க்கப்பட்டவையாகும்.

"இந்தி உலக மொழியாக வேண்டுமென்றால் அம்மொழியில் பலப் பல புத்தகங்கள் வெளிவர வேண்டும்.

**"இந்தியை நாடு பூராவிலும் புரிந்துகொள்ள சமஸ்கிருதத்திலிருந்து மேலும் பல சொற்களை இந்தி கடன் வாங்கிக் கொள்ள வேண்டும்,"**

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.